இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 06-09-2025

# மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும்!

நாட்டில் உள்ள வரிகளை ஒருங்கிணைக்கப் போகிறோம் என்று சொல்லி ஒன்றிய அரசு, மாநிலங்களின் நிதி உரிமையைப் பறித்தது.

2017 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதியன்று புதிய ஜி.எஸ்.டி. வரியை அறிமுகம் செய்தார்கள். 5 விழுக்காடு, 12 விழுக்காடு, 18 விழுக்காடு, 28 விழுக்காடு என்று நான்கு பிரிவுகளாக வரிகளைப் போட்டார்கள். ‘கம்ப்யூட்டர் மெஷின் கன்பியூஃஸ் ஆகியிடுது’ என்று இதனைத்தான் கோவைத் தொழில் அதிபர் ஒருவர் நிர்மலா சீதாராமனிடம் சொன்னார். இதற்காகவே அவர் தனியறையில் மன்னிப்புக் கேட்க வைக்கப்பட்டார்.

சரக்கு மற்றும் சேவை வரியால் அதிகம் பாதிக்கப்பட்டது மக்கள்தான். அடுத்ததாக பாதிக்கப்பட்டது மாநில அரசுகள். அதன் நிதி உரிமை பறிக்கப்பட்டது. மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்வோம் என்று சொன்னார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு இழப்பீடு தந்தார்கள். அதையும் நிறுத்திவிட்டார்கள். இந்தக் கோரிக்கையை தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் தொடர்ந்து சொல்லி வருகின்றன.

இந்த நிலையில் சரக்கு மற்றும் சேவை வரி விகிதத்தை இரண்டு பிரிவுகளாக ஆக்கிவிட்டது ஒன்றிய அரசு. இனிமேல் 5 விழுக்காடு, 18 விழுக்காடு ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் தான் வரிகள் விதிக்கப்படும். 12 விழுக்காடு, 28 விழுக்காடு என்று இருந்த இரண்டு பிரிவை நீக்கிவிட்டார்கள்.

சரக்கு மற்றும் சேவை வரியை எளிமைப்படுத்தப் போகிறோம் என்றும், பிரதமரின் தீபாவளிப் பரிசு என்றும் இதற்கு விளக்கம் சொல்கிறது பா.ஜ.க. அந்தப் பொருள் விலை குறையும், இந்தப் பொருள் விலை குறையும் என்று ஊடகங்களுக்கு செய்தி கொடுத்து வருகிறார்கள். ஆனால் மாநில அரசுகள் இதனால் சந்திக்கும் நெருக்கடி குறித்து ஒன்றிய அரசு கவலைப்படவில்லை.

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி.) கவுன்சில் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதில் மாநிலங்கள், யூனியன் பகுதிகளின் நிதி அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, “மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும்” என்ற கோரிக்கையை அழுத்தமாக வைத்துள்ளார்.

அதற்கு முன்னதாக 8 மாநில நிதி அமைச்சர்கள் தனியாக கூட்டம் நடத்தினார்கள். இக்கூட்டத்தில் தமிழ்நாடு, கேரளா, தெலங்கானா, கர்நாடகம், பஞ்சாப், மேற்கு வங்காளம், இமாசலப் பிரதேசம், அரியானா ஆகிய மாநில நிதி அமைச்சர்கள் பங்கேற்றார்கள். ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் காரணமாக ஏற்படும் இழப்பீட்டை ஈடுசெய்ய வேண்டும் என்று இம்மாநில முதலமைச்சர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

**மக்களுக்கு அநியாய வரி போடுவதையும், அந்த வரியை மக்கள் ஒழுங்காகச் செலுத்துகிறார்கள் என்பதையும் பெரிய சாதனையாகச் சொல்வது பா.ஜ.க. அரசாகத்தான் இருக்க முடியும். இதில் என்ன பெருமை இருக்கிறது? வரியைக் குறைத்து விட்டதாகச் சொல்லும் பா.ஜ.க. அரசுதான், சில மாதங்கள் கழித்து, ‘பார்த்தீர்களா? ஜி.எஸ்.டி. வரி வசூல் அதிகம் ஆகிவிட்டது’ என்பதையும் பெருமையாகச் சொல்லும். விலை குறையப் போகிறது என்று இன்று சொல்பவர்கள், அதிக வரியை வசூலித்ததையும் சாதனையாகச் சொல்லத்தான் போகிறார்கள்.**

பெரு நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு 1 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வரிச் சலுகைத் தள்ளுபடிகளை அறிவிக்கும் பா.ஜ.க. அரசு, ஜி.எஸ்.டி. வரி வசூலில் விழுக்காடுகளைக் குறைப்பதில் என்ன பெருமை இருக்க முடியும்?

**மக்களுக்கு நேரடியாகச் சேவை செய்ய வேண்டிய கடமை மாநிலங்களுக்குத்தான் இருக்கிறது. மாநில அரசுகளிடம்தான் மக்கள் எதிர்பார்ப்பார்கள். அந்த மாநிலங்களுக்கு ஜி.எஸ்.டி. வரியால் பயனுண்டா? ஜி.எஸ்.டி. வரிப் பணம், மாநிலங்களுக்கு உரிய அளவில் பகிர்ந்தளிக்கப்படுகிறதா? ஜி.எஸ்.டி. தரும் அளவுக்கு இல்லாவிட்டாலும் குறைந்த அளவிலாவது தரப்படுகிறதா? ஏதுமில்லை.**

ஜி.எஸ்.டி. - வரி விதிப்பு என்பதே மாநில அரசின் நிதி மூச்சுக்காற்றை நிறுத்தும் செயல்தான். இதனையும் தாக்குப் பிடித்து தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. எந்த நிதியையும் முறையாக, முழுமையாக வழங்குவது இல்லை. மாநிலங்களின் நிதி உரிமையையும், நிதி பலத்தையும் சுரண்டியதுதான் ஜி.எஸ்.டி. ஆகும். மாநிலங்களை பங்காளிகளாக அல்ல, பகையாளிகளாக நடத்தி வருவதுதான் ஜி.எஸ்.டி. ஆகும். மாநில அரசுகளின் வருவாயைச் சிதைப்பதுதான் இதன் முக்கியமான நோக்கம் ஆகும்.

ஜி.எஸ்.டி.யால் என்னென்ன பொருள்கள் எவ்வளவு விலை உயர்கிறது என்று தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொன்னபோது, ‘இறுதிச் சடங்கு நடத்துவதற்கு ஜி.எஸ்.டி. வரி விலக்கு’ என்று 2022 ஆம் ஆண்டு பதில் அளித்தவர்தான் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு எந்த நிதியும் இல்லை. இதைப் பற்றிக் கேட்டபோது, “மாநிலங்களுக்கு 1.50 லட்சம் கோடியை வட்டியில்லாத கடனாகத் தந்திருக்கிறோமே, இது போதாதா?” என்று கேட்டவர்தான் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். இப்படிப்பட்டவர்கள் கையில் நிதி மூலதனம் சிக்கி சின்னாபின்னம் ஆகிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஒன்றிய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இல்லை. ஆந்திராவின் பெயர் ஐந்து இடத்தில் இருந்தது. பீகாரின் பெயர் ஐந்து இடத்தில் இருந்தது. மேற்கு வங்கம் ஒரு இடத்தில் வந்தது. நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இல்லை. இத்தகைய சூழலில்தான் மாநில அரசை நடத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

இந்த நிலையில் வரிச் சீர்திருத்தம் செய்வதை விட முக்கியமான நிதிச் சீர்திருத்தம் தேவை. ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையிலான நிதிப் பகிர்வு குறித்த பேச்சுவார்த்தையை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடங்க வேண்டும்.

## இங்கிலாந்து அமைச்சர்

# திருமதி கேத்தரின் வெஸ்ட்டுடன் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!

### பல்வேறு துறைகளில் தமிழ்நாடு – இங்கிலாந்து ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார்!



**சென்னை, செப். 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.9.2025 அன்று TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில், இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில் உள்ள வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தில், இங்கிலாந்து அமைச்சர், நாடாளுமன்ற துணை செயலாளர் (இந்தோபசிபிக்) கேத்தரின் வெஸ்ட் அவர்களை சந்தித்து, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு இங்கிலாந்து ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார்.**

இந்தச் சந்திப்பின்போது, இந்தோபசிபிக் பகுதிகளில் பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல், பசுமைப் பொருளாதாரத் தலைமை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் மீள்தன்மை கொண்ட கடல்சார் இணைப்பு போன்ற துறைகளில் தமிழகத்தின் பங்கினையும், மின்சார இயக்கம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஐடி சேவைகள் மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் தமிழ்நாட்டின் வலிமையையும் எடுத்துரைத்தார். மேலும், வர்த்தகம் மற்றும் முதலீட்டு கூட்டாண்மை மூலம் இந்தத் துறைகளில் அதிக அளவிலான இங்கிலாந்து நாட்டின் பங்களிப்பையும் கோரினார்.

உயர்கல்வி, திறன் மேம்பாடு மற்றும் காலநிலை ஒத்துழைப்பில் இங்கிலாந்துதமிழ்நாடு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. பசுமை ஹைட்ரஜன், சூரிய சக்தி மற்றும் காற்றாலை ஆற்றல் ஆகியவற்றில் உலகளாவிய அளவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குவதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார். மேலும், காலநிலை மாற்ற உத்திகளில் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதித்தனர்.

கலாச்சார மற்றும் புலம்பெயர் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும், தமிழ்நாட்டின் கடலோர நிலையைப் பயன்படுத்தி கடல்சார் ஒத்துழைப்பு குறித்தும் ஆலோசனை மேற்கொண்டார்.

இச்சந்திப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து பயணத்திற்கு மேலும் வலுசேர்க்கும். ஏனெனில், ஏற்கனவே விண்வெளி, கடல்சார் நுண்ணறிவு, புதுப்பிக்கத்தக்கவை, ஜவுளி மற்றும் வடிவமைப்பு கல்வி ஆகியவற்றில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## உங்களில் ஒருவராக இருந்து செயல்படும் திராவிட மாடல் அரசின் சார்பில்

# இசுலாமிய சகோதரர்களுக்கு வாழ்த்துகள்!

### மீலாதுன் நபியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

**சென்னை, செப்.6-**

**உங்களில் ஒருவராக இருந்து செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசின் சார்பில் இசுலாமிய சகோதரர்களுக்கு மீலாதுன் நபி வாழ்த்துக்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தி வருமாறு:-

நபிகள் நாயகத்தின் பிறந்தநாளினைக் கொண்டாடிடும் அன்புக்குரிய இசுலாமியச் சகோதரர்கள் அனைவருக்கும் எனது மீலாதுன் நபி வாழ்த்துகள்!

உண்மை, இரக்கம், ஈகை, அன்பு, கல்வியறிவு, புறம்பேசாமை, பெண்களை மரியாதையோடு நடத்துதல் என உலகத்துக்கு என்றென்றும் தேவையான நற்கருத்துகளைப் போதித்த உயர்ந்த உள்ளமாகத் திகழ்ந்தவர் அண்ணல் நபி அவர்கள். அவரது போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்திடும் இசுலாமிய உடன்பிறப்புகளின் உரிமைகளுக்கும், நலனுக்கும் என்றும் உழைத்திடும் அரசாகக் கழக அரசு ஒவ்வொரு முறை ஆட்சியமைக்கும்போதும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இட ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகை, சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு என எண்ணற்ற நற்பணிகளை எப்போதும் கழக அரசு செய்யத் தவறியதே இல்லை. அண்மையில் கூட சென்னை விமான நிலையம் அருகே 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் அமைக்கப்பட்டு வருகிறது. சிறுபான்மைச் சமூகத்தினரின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்திடுவதில் நமது திராவிட மாடல் அரசு கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றி வருகிறது.

மேலும், இஸ்லாமியர்களுக்கும் இலங்கைத் தமிழருக்கும் எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஆட்சிக்கு வந்ததுமே சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதோடு, தமிழ்நாட்டில் CAA நடைமுறைப்படுத்தப்படாது என்று துணிச்சலோடு அறிவித்ததும் நமது திராவிட மாடல் அரசுதான்!

இப்படி, உங்களில் ஒருவராகவே இருந்து செயல்படும் அரசின் சார்பில், எனது அன்பார்ந்த மீலாதுன் நபி வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## தொழில் துறை – உயர் கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்!

# இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத்தூதர் விக்ரம் துரைசாமி பாராட்டு!

### லண்டனில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேரில் தெரிவித்தார்!

**லண்டன், செப்.6 -**

**தமிழ்நாடு முதலமைச்சர்மு.க. ஸ்டாலின் அவர்களுடனான சந்திப்பின்போது, தொழில்துறை மற்றும் உயர்கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருவதை இங்கிலாந்து நாட்டிற்கான இந்திய தூதர் விக்ரம் துரைசாமி அவர்கள் பாராட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் முதலீடு மற்றும் உலகளாவிய ஈடுபாடு குறித்து இங்கிலாந்து நாட்டிற்கான இந்திய தூதர் விக்ரம் துரைசாமி அவர்களை இலண்டனில் சந்தித்துப் பேசினார்.

தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் உலகளாவிய நடவடிக்கைகளுக்கு இந்தியத் தூதர் விக்ரம் துரைசாமி அவர்கள் தனது பாராட்டுகளை தெரிவித்ததோடு, தமிழ்நாட்டின் தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் பொருளாதார செயல்திறனையும் பாராட்டினார். இங்கிலாந்து மற்றும் உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு மிகவும் விருப்பமான இடங்களில் தமிழ்நாடு ஒன்றாகும் என்று தெரிவித்தார்.

சமீபத்தில் நிறைவடைந்த இந்தியாஇங்கிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை பயன்படுத்திடும் சிறந்த நிலையில் உள்ள இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும் என்பதை விக்ரம் துரைசாமி அவர்கள் எடுத்துரைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் போது மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ்நாட்டின் முதலீட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், எதிர்காலத்தை நோக்கியதாகவும், உலகளாவிய சந்தை வாய்ப்புகளுடன் திட்டமிட்ட ரீதியில் இணைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயர்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருவதை இந்தியத் தூதர் குறிப்பாகப் பாராட்டினார். புதிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கட்டமைப்பின் கீழ் இந்தியாவில் பல்கலைக்கழக வளாகங்களை நிறுவ விரும்பும் இங்கிலாந்து நாட்டின் பல்கலைக் கழகங்களுக்கு தமிழ்நாடு சிறந்த தேர்வாக இருப்பதை அவர் குறிப்பிட்டார். மேலும், இங்கிலாந்து நாட்டு கல்வி நிறுவனங்களுடன் மாநிலத்தின் முனைப்பான ஈடுபாட்டையும் வரவேற்றார்.

சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கான ஒழுங்குமுறை ஆதரவு மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட இங்கிலாந்துதமிழ்நாடு கல்வி கூட்டாண்மைகளை எளிதாக்குவதில் மாநிலத்தின் முயற்சிகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியத் தூதருடன் பகிர்ந்து கொண்டார். அப்போது, பல நிறுவனங்களுடன் நடந்து வரும் சந்திப்புகள் மற்றும் இந்தியாஇங்கிலாந்து கல்வி உறவுகளை வலுப்படுத்துவதில் ஒரு முன்னெடுப்பு நடவடிக்கையாக எக்ஸிடர் பல்கலைக்கழகத்துடன் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின்போது, நமது இளைஞர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்கும் உயர்தர முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் சுட்டிக்காட்டினார்.

இந்தியத் தூதருடனான சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, சமீபத்தில் நடைபெற்ற சின்னத்திரை நடிகர் சங்க தேர்தலில் வெற்றி பெற்ற நிர்வாகிகள், சங்கத்தின் தலைவர் பரத், பொதுச்செயலாளர் வே.நவீந்தர் ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (4.9.2025) நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.